**தலைப்பு 160 – மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 07 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2019 மே 29 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(ஈ) பிரிவு மற்றும் 38 பிரிவின் பின்வரும் விடயங்கள் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்கு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது.

(ஆ) பொது முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி நிலைமைக் கூற்று

பின்வரும் குறைபாடுகள் கண்டறிப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கிய நடைமுறை அல்லாத சொத்துக்கள் கூற்று மற்றும் சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தில் காணப்பட்ட நிலையான சொத்துக்கள் மொடியுளவில் காணப்பட்ட மோட்டார் வாகனங்கள் மற்றும் ஏனைய இயந்திர உபகரணங்களின் மீதிகள் இடையே முறையே ரூபா 205,000 இற்கான மற்றும் ரூபா 31,873,443 இற்கான வித்தியாசமொன்று காணப்பட்டது. | நிதிக்கூற்றுக்கள் மற்றும் சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தின் பிரகாரம் காணப்படும் வித்தியாசங்களை இணக்கஞ் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது. | 2004 ஆண்டு முதல் தயாரிக்கப்பட்ட நடைமுறை அல்லாத சொத்துக்கள் பதிவேட்டில் மீதி மற்றும் சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட மீதிகளிடையே இந்த வித்தியாசம் காணப்பட்டது. தற்போது சிகாஸ் நிகழ்ச்சித் திட்டம் மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்கள் பதிவேட்டின் மீதிகள் இணக்கஞ் செய்யப்பட்டு வருவதுடன் கூடிய விரைவில் அவற்றை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | நடைமுறை அல்லாத சொத்துக்களில் வெளிநாட்டுதவி செயற்திட்ட செலவுகள் ரூபா 1,139,259 தொகை உட்படுத்தப்பட்டுள்ளது. | நடைமுறை அல்லாத சொத்துக்கள் மற்றும் வெளிநாட்டுதவி வெவ்வோறாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டியிருந்தது. | வெளிநாட்டுதவி என ரூபா 1,139,259 இற்கான மீதியொன்று கணிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 20,975,201,524 இற்கான நிலையான சொத்துக்கள் பதியப்பட்டிருந்த போதிலும், திறைசேரியின் புதிய சிகாஸ் மொடியுலின் பிரகாரம் இந்த தலைப்பின் கீழ் ரூபா 20,954,342,526 இற்கான சொத்துக்கள் அவதானிக்கப்படவில்லை. | திறைசேரி ஏடுளுடன் இணக்கஞ் செய்யப்பட்டு வித்தியாசத்தை சரிசெய்ய வேண்டியிருந்தது. | இது வரை ரூபா 20,858,998 தொகையான மீதியொன்று புதிய சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்டுள்ளது. சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தில் காணப்பட்ட தொழில்நுட்ப கோளாரின் காரணமாக மஹாவலி பிரிவின் (Sub office) மீதி இது வரை உள்ளடக்க முடியாதிருந்தது. அரச கணக்கு திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கு இது தொடர்பாக அறிவுறுத்தப்பட்டதுடன் கூடிய விரைவில் அதனை சரிசெய்வதற்கு இயலும். |

**1.6.2 கட்டுநிதிக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தி யோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 7002/0000/00/0323/0017/000 இலக்கம் கொண்ட கணக்கு தொடர்பாக 2007 ஆண்டு முதல் காணப்படும் ரூபா 260,361 இற்கான தீர்க்கப்படாத முற்பண மீதியொன்று இருந்தது. | தீர்க்கப்படாத முற்பணம் தொடர்பாக கவனம் செலுத்தி தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது. | இந்த முற்பணத்தை தீர்ப்பதற்காக பொலிஸில் முறைப்பாடு ஒன்று செய்திருந்ததுடன், அந்த பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

**1.6.3 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

அமைச்சினால் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சில பதிவேடுகள் முறைப் பிரகாரம் மற்றும் நாளது வரை பேணப்பட்டிருக்கவில்லை என தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | **பொருட் பதிவேடு** | | |
| | நிதிப் பிரமாணம் 454(1) இன் பிரகாரம் பொருட் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. (Inventory Book) | நிதிப் பிரமாணம் 454(1) ஏற்பாடு களின் பிரகாரம் 44 ஆவது பொதுப் படிவத்தின் பிரகாரம் பொருட் பதிவேடு நாளது வரை பேணப்பட்டி ருக்கவில்லை. | பொருட் பதிவேடு ஒன்று பேணப்பட்டுள்ளது. |
| (ஆ) | **சேதங்கள் தொடர்பான பதிவேடு** | | |
| | நிதிப் பிரமாணம் 110 இன் பிரகாரம் சேதங்கள் தொடர்பான பதிவேடு நாளது வரை ஆக்கப்பட்டு இருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 110 இன் ஏற்பாடு களின் பிரகாரம் அதன் கீழ் காணப்படும் படிவத்தின் பிரகாரம் சேதங்கள் தொடர் பாக பதிவேடு ஒன்று நாளது வரை ஆக்கப்பட்டு பேணப்பட வேண்டும். | அமைச்சின் கீழ் நட்டங்கள் சேதங்கள் அறிவிக்கப்பட்டி ருக்காமையால் நட்டங்கள் சேதங்கள் பதிவேடு நாளது வரை ஆக்கப்பட்டி ருக்கவில்லை. |

### 1.6.4 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுபடுத்துதல்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் படி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக சான்றுபடுத்துதல் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தி யோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டுக்காக வெற்றிகரமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணப்பட்டு வருவதை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியிருந்ததுடன் அந்த முறைமையின் வெற்றிகரமான தன்மை தொடர்பாக அவ்வப்போது மீளாய்வு செய்து அதன் படி முறைமை வெற்றிகரமாக நடாத்துவதற்கு தேவையான வித்தியாசங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. அந்த மீளாய்வுகள் எழுத்துமூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதி ஒன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்ப வேண்டியிருந்த போதிலும், அவ்வாறான மீளாய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடு களின் பிரகாரம் செயற்பட வேண்டியிருந்தது. | பதில் வழங்கியிருக்கவில்லை. |

### 1.6.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

| அவதானிப்பு | | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| சட்டங்கள், விதிகள், பிரமாண ங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | நிதிப் பிரமாணம் 753 | சுற்றாடல் பிரிவின் பொருட் பதிவேட்டில் பதியப்படாத 1070 விடயங்கள் காணப்பட்டன. | நிதிப் பிரமாணங் களின் பிரகாரம் அவ் விடயங்களை பொருட் பதிவேட்டில் பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியுள்ளது. | இது தொடர்பாக கணிப்பீட்டு சபைக்கு அறிவுரை வழங்கியுள் ளதுடன் வருடாந்த பண்டக் கணிப்பீட்டின் அறிக்கை கிடைத்தவுடன் அது தொடர்பாக கணக்காய்விற்கு அறிவிப்பதாக அறவிக்கின்றேன். |
| (ii) | நிதிப் பிரமாணம் 758 | பண்டக் கணிப்பீட்டு அறிக்கையின் படி சொத்துக்களின் மிகைகள் மற்றும் பற்றாக்குறைகள் ஆக முறையே 260 விடயங்கள் மற்றும் 190 விடயங்கள் காணப்பட்ட போதிலும் அது தொடர்பாக ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எழுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் பற்றாக்குறைகள் மற்றும் மிகைகள் தொடர்பாக செயற்பட வேண்டியிருந்தது. | இது தொடர்பாக கணிப்பீட்டு சபைக்கு அறிவுரை வழங்கியுள் ளதுடன் வருடாந்த பண்டக் கணிப்பீட்டின் அறிக்கை கிடைத்தவுடன் அது தொடர்பாக கணக்காய்விற்கு அறிவிப்பதாக அறவிக்கின்றேன். |
| (iii) | நிதிப் பிரமாணம் 804 மற்றும் 753 | அமைச்சினை புதிய கட்டிடத்திற்கு எடுத்த சென்ற போது பழைய கட்டிட வளவில் காணப்பட்ட சொத்துக்கள் ஏனைய அரச நிறுவனங் களுக்கு வழங்கியிருந்த போதிலும் அதற்காக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணங் களின் பிரகாரம் முறைப்படி குறிப்பிட்ட பதிவேடுகள் பேணப்பட வேண்டியிருந்தது. | வேறு நிறுவனங்க ளுக்கு வழங்கியிருந்த விடயங்களுக்கு வழங்கள் கட்டளை கொடுத்திருந்ததுடன் அதற்கான பெறுவனவு கட்டளைகள் சில நிறுவனங்களில் இருந்து இன்னும் பெற வேண்டியிருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2018 நவம்பர் 05 திகதிய 06/2018 ஆம் இலக்க திறைசேரி செயற்பாட்டு சுற்றறிக் கையின் 01 ஆம் பந்தி | 0007040898 இலக்க வங்கி கணக்கிற்காக பேணப்பட்டிருந்த காசேட்டில் 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இறுதி மீதியை தீர்க்கும் போது சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் சீராக்கல் கணக்குகளை தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப் பட்டிருக்க வேண்டியிருந்தது. | அனைத்து கணக்குகளின் மீதிகள் சரியாக தீர்க்கப்பட்டிருந்தது. |
| (இ) | 2018 அக்தோபர் 19 திகதிய 266/2018 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பந்தி 4.11 | அரச கணக்கு திணைக் களத்திற்கு அறிவிக்கப் படாத எதுவித கடப்பாடுகளும் அல்லது பொறுப்புக்களும் 2019 ஆண்டின் போது தீர்க்கப்பட்டக் கூடாது என குறிப்பிட்டிருந்த போதும், அவ்வாறு அரச கணக்கு திணைக்களத்திற்கு அறிவிக்காத ரூபா 1,103,666 இற்கான பொறுப்புக்கள் 2019 ஆண்டின் போது தீர்க்கப்பட்டிருந்தது. | பொதுநிதி சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டியிருந்தது. | 2018 திசம்பர் 31 திகதியில் உள்ளவாறு கொடுப்பனவுக்காக சமர்ப்பிக்கப்படாத எனினும் 2019 ஆண்டு ஆரம்பத்தில் கொடுப்பனவுக்காக சமர்ப்பித்திருந்த உறுதிச் சான்றுகளாகும். |
| (ஈ) | 2018 நவம்பர் 21 திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்கு சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் கட்டுநிதிகள் சீராக்கல் கணக்கு தயாரிக்கப்பட்டு மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டு மெனினும், அமைச்சினால் நிதிக்கூற்றுக்களுடன் கட்டுநிதி சீராக்கல் கணக்கு தயாரிக்கப்பட்டு சமர்ப்பித்திருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களுடன் கட்டுநிதி சீராக்கல் கணக்கு ஒன்று சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தது. | 2019 ஏப்ரல் 29 திகதி சமர்ப்பிக்கப்பட்டது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவு முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தி யோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | தேவையினை இனங்காணாமல் மூலதன ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் ரூபா 5,557.64 மில்லியன் அதாவது மேற்கொள் ளப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளில் 99.32 சதவீதமும் சேமிக்கப்பட்டி ருந்தது. 04 செலவு விடயங்களுக்காக மேற்கொள்ளப் பட்டிருந்த ரூபா 05 மில்லியனுக்கான மூலதன ஏற்பாடுகள் முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது. | தேவையினை இனங்கண்டு சரியான முறையில் ஏற்பாடுகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது. | அமைச்சர் அலுவலகம் மற்றும் இராஜாங்க அமைச்சர் அலுவலகம் ஆகியவற்றிற்கு ஒதுக்கியிருந்த ஏற்பாடுகள் செலவிடப்படாமைக்குரிய காரணம் கட்டிடத்தின் மற்றும் இயந்திர உபகரணங் களின் திருத்த வேலைகள் மேற்கொள்வதற்கு தேவைப் படாமையே ஆகும். மாதுருஓயா தென் கரை அபிவிருத்திச் செயற்திட்டத்திற்காக ஒதுக்கி யிருந்த ரூபா 5 மில்லியன் தொகை செய்முறைசார் காரணங்களினால் செயற் திட்டத்தின் ஆரம்ப அலுவல்கள் பூர்த்தி செய்யப்படாமையால் சேமிக்கப்பட்டது. |
| (ஆ) | தேவையினை இனங்காணாமல் ஏற்பாடுகள் ஒதுக்குதல் மற்றும் திட்டமிட்டிருந்தவாறு அலுவல்கள் நடைபெறாமையின் காரணமாக 10 மூலதனச் செலவு விடயங்களுக்கு ஒதுக்கியிருந்த மொத்த கூட்டுத் தொகை ரூபா 2,946.87 மில்லியனுக்கான ஏற்பாடுகளில் கூட்டுத்தொகை ரூபா 1,250.9 மில்லியன் அதாவது 23 சதவீதம் முதல் 74 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சில் சேமிப்புக்கள் காணப்பட்டன. | மதிப்பீடுகள் தயாரிக்கும் போது தேவையினை இனங்கண்டு அதன் பிரகாரம் ஏற்பாடுகளை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது. | கட்டுநிதி வழங்கி இருக்காமை, செயற்திட்டங்கள் செயற்படுத்து வதில் ஏற்பட்டிருந்த செய்முறை சார் சிக்கல்கள் மற்றும் புதிய உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கான தேவை ஏற்படாமை போன்ற தவிர்க்க முடியாத காரணங்களினால் இந்த சேமிப்புக்கள் ஏற்பட்டிருந்தன. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பாதீட்டு மதிப்பீடுகள் உரிய முறையில் தயாரிக்கப்படாமை யால் 03 மூலதன செலவு விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்த ரூபா 4,000 மில்லியனுக்கான ஏற்பாடுகளில் ரூபா 2,262.58 மில்லியன் தொகை அதாவது 23 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சில் ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தன. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | மீளாய்வாண்டின் போது ஒரு மூலதன செலவு விடயம் ஒன்றிற்காக பெற்றிருந்த குறைநிரப்பு ஏற்பாடுகள் ரூபா 257 மில்லியன் தொகை முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது. வேறு 02 செலவு விடயங் களுக்காக பெற்றிருந்த குறை நிரப்பு ஏற்பாடுகள் ரூபா 27.16 மில்லியன் தொகையினால் 38 சதவீதம் மற்றும் 86 சதவீதம் சேமித்தல் காணப்பட்டது. | குறைநிரப்பு ஏற்பாடுகள் பெற்றுக் கொள்ளும் போது தேவையினை இனங்கண்டு சரியாக ஏற்பாடுகள் பெற்றுக் கொள்ளப்பட வேண்டியிருந்தது. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (உ) | வெலிஓயா நீர் உதவிப் பிரதேசத்தின் முகாமைத்துவத் திற்கான திட்டமொன்று தயாரிக்கும் நிகழ்சித் திட்டத்தின் இறுதிக் கட்டத்தை செயற்படுத்து வதற்காக காணிப் பயன்பாட்டு கொள்கை திட்டமிடல் திணைக்களத்துடன் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் 10 மாத காலத்திற்காக ரூபா 1.3 மில்லியனிற்கான பெறுமதிக்கு உடன்படிக்கை ஒன்றினை அணுகியிருந்தது. 2016 ஜுலை 14 திகதி இந்த உடன்படிக்கைக்கு அணுகியிருந்த போதிலும், 2019 கணக்காய்வுத் திகதி வரை அதற்கு உரிய ஒருங்கிணைந்த காணி பயன்படுத்தல் வலயங்களின் வரைபுகள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | உரிய விடயங்கள் குறிப்பிட்டுள்ளவாறு காலப் பகுதியை மேற்கொள்ளப் பட்டு உரிய விடயங்கள் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது. | பதில் அனுப்பியிருக்கவில்லை. |

### 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு அணுகுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தி யோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப் பிரமாணம் 94(1) இன் பிரகாரம் வருடாந்த மதிப்பீடுகளில் நிதி ஏற்பாடுகள் காணப்பட்டால் அன்றி வேலை ஒன்று அல்லது சேவை ஒன்று அல்லது வழங்கள் ஒன்றிற்கான ஏதேனும் செலவு ஒன்றிற்கு அல்லது கடப்பாடு ஒன்றிற்கு இணங்கி இருக்கக் கூடாது. எனினும் மீளாய்வாண்டிற்காக அங்கீகரிக் கப்பட்ட ஏற்பாடுகளை மிகைத்து ரூபா 213,730 இற்கான கடப்பாடு ஏற்படுத்திக் கொண்டிருந்தது. | நிதிப் பிரமாணம் 94(1) இன் பிரகாரம் செயற்பட வேண்டியிருந்தது. | பிரயாணச் செலவுகள் மற்றும் மேலதிக நேரத்திற்காக இந்த கொடுப்பனவு மேற்கொள்ளப்பட் டிருந்ததுடன், இவ்வாறான செலவுகளுக்காக ஏற்பாட்டு வரையறையில் செலவுகள் செய்வதை உச்ச அளவு முகாமைத்துவம் செய்த போதிலும் ஏற்படக் கூடிய செய்முறைசார் நிலைமையில் இந்த கொடுப்பனவு மேற்கொள் ளப்பட்டிருந்தது. |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டிற்கான 2019 பெப்ரவரி 26 திகதி இலங்கை டெலிகொம் நிறுவனத்திற்கு செலுத்தப்பட்ட ரூபா 137,925 இற்கான தொகை ஒதுக்கீட்டுக் கணக்கில் குறிப்பு iv இல் உட்படுத்தியிருக்கவில்லை. | பொறுப்புக்கள் பதிவேட்டில் அனைத்து பொறுப்புக்களை யும் உட்படுத்து வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஒதுக்கீட்டு கணக்குகளுக்காக 2019 பெப்ரவரி 25 திகதி வரை கணக்குப் பகுதி சமர்ப்பித்திருந்த கொடுப்பனவு ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு பொறுப்புக்கள் பதிவேடு ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. எனினும் இந்த உறுதிச் சான்று அந்த தினத்திற்கு பின்னர் கணக்குப் பகுதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மையால் பொறுப்புக்கள் பதிவேட்டில் உட்படுத்தியிருக்க வில்லை. |

### 2.3 வங்கிக் கணக்குகள் நெறிப்படுத்துதல்

வங்கிக் கணக்குகள் நெறிப்படுத்துதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது கண்டறியப்பட்ட குறைபாடுகள் கீழ் காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தி யோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| | ------------------------------------------------ | ------------------ | ------------------------------------------------------ |
| (அ) | இலங்கை வங்கியின் 7040482 இலக்கங் கொண்ட மற்றும் 7040979 இலக்கங் கொண்ட வங்கிக் கணக்குகள் தொடர்பாக தகவல்கள் நிதிக்கூற்றுக்களுடனான வங்கிக் கணக்குகள் மீதான நிலைமை கூற்றில் உட்படுத்தியிருக்காததுடன் வங்கிக் கணக்குகள் தீர்க்கப்பட்டிருப்பின் அதற்காக வங்கியில் இருந்து பெறப்பட்ட மீதிகளை உறுதிப்படுத்தலும் சமர்ப்பித்திருக்கவில்லை. | அனைத்து வங்கிக் கணக்குகள் தொடர்பாக தகவல்கள் நிலைமை கூற்றில் உட்படுத்த வேண்டியிருந்தது. | தாமதத்தின் காரணமாக நிலைமை கூற்றில் உட்படுத் துவது தவிர்க்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | இலங்கை வங்கியின் 0007040911 இலக்கங் கொண்ட வங்கிக் கணக்கிற்காக 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தயாரிக்கப்பட்டிருந்த வங்கி இணக்கக் கூற்றின் பிரகாரம் 2018 திசெம்பர் 24 திகதிய SRE 483530 இலக்கங் கொண்ட ரூபா 7,167,900 தொகை பெறுமதியான இனங்காணப்படாத பெறுவனவுகள் கணக்காய்வுத் திகதி அளவிலும் இனங்கண்டிருக்கவில்லை. | அனைத்து வங்கிகளில் இருந்து கிடைத்திருந்த பெறுவனவுகளை இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது. | 2018 திசெம்பர் 24 திகதி அளவில் இந்த தொகை குறிப்பிட்ட செயற்திட்டத்தின் இனங்காணப்படாத பெறுவனவு ஒன்றாக காணப்பட்டதுடன், அதனை பொது வைப்புக் கணக்கில் வைப்புச் செய்து, குறிப்பிட்ட செயற்திட்டத்தில் இருந்து தகவல்களை பெற்று உரிய முறையில் 2019 மார்ச் 11 திகதி திறைசேரியின் செயற்பாட்டு திணைக்களத்தின் பொது வைப்புக் கணக்கில் வைப்புக் கணக்கில் வைப்புச் செய்வதற் காக அனுப்பப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 தூரநோக்கும் சேவைகளும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தி யோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பொது மக்களின் மற்றும் பொருளாதாரத்தின் நல்வாழ்விற்காக இயற்கை சுற்றாடலை நிலைபேறாக ஆக்குவதன் மூலம் சுகாதாரம் சார் விருப்பமான சுற்றாடல் என்ற தூரநோக்குடன் செயற்படும் சுற்றாடல் அமைச்சின் கீழ் உள்ள அனைத்து தரப்பினரதும் பங்களிப்புடன் கழிவுப் பொருட்களின் முகாமைத்துவத்தை மேற்கொள்வதற்காக பாரிய பொறிமுறை ஒன்றினை கட்டியெழுப்புவதற்கான தேவை தற்போது எழுந்துள்ளது. இவ்வாறு சுற்றாடல் சிக்கல்கள் ஏற்படக் கூடிய பரப்புகளை இனங்காண்பதற்காக ஆபத்தினை கணித்தல் செய்முறை யொன்றை அமைச்சினால் கடைபிடிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அதன் பிரகாரம் செயற்பட்டிருப்பதாக அவதானிக்க முடியவில்லை. | ஆபத்தினை கணித்தல் செய்முறை ஒன்றினை கடைபிடிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது. | பதில் அளித்திருக்கவில்லை. |

### 3.2 செய்பணிகளை நிறைவேற்றாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தி யோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கை திட்டத்தின் படி மெதிரிகிரிய மற்றும் லங்காபுர வட்டாரங்களில் செயற்படுத்துவதற்கு இருந்த ஐந்து உப செயற்திட்டங்கள், புதிய மதிப்பீடுகள் தயாரித்தல் விபரக் குறிப்புகளுக்கு இணக்கியிருக்கவில்லை என குறிப்பிட்டு செயற்படுத்தியிருக்கவில்லை. | செயல் நடவடிக்கை திட்டத்தின் படி செயற்பட வேண்டியுள்ளது. | பதில் அளித்திருக்கவில்லை. |

## 3.3 செயற்திட்டங்கள் நிறைவேற்றுவதில் தாமதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தி யோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| கம்பஹா மாவட்ட ஒன்றித்த குப்பை முகாமைத்துவ செயற்திட்டத்தின் சேதனப் பசளை செயற்திட்டத்திற்காக மேலதிக கட்டிடம் ஒன்று நிர்மாணிப்பதற்காக 2017 ஆண்டின் போது ரூபா 76,512,353 இற்கான ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருந்தது. அதற்காக பொறியியல் சார் கருமங்கள் தொடர்பாக மத்திய உசாத்துணை பணியகத்துடன் 2018 ஜனவரி 29 திகதி உடன்படிக்கையொன்று மேற்கொண்டிருந்ததுடன் 180 தினங்களில் இந்த நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டுமெனினும் கணக்காய்வுத் திகதியாகிய 2019 ஏப்ரல் வரை குறிப்பிட்ட கருமங்கள் பூர்த்தி செய்திருக்கவில்லை. | குறிப்பிட்டுள்ளவாறு நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்து எதிர்பார்த்த குறிக்கோள்களை நிறைவேற்றப்பட வேண்டியுள்ளது. | பதில் அளித்திருக்கவில்லை. |

## 3.4 பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் முன்னேற்றமொன்றினை பெற்றிருக்காத செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தி யோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கையில் கமத்தொழில் சார் முறைமையின் கீழ் விவசாய வாழ்வாதாரங்கள் மேம்படுத்துதல் மற்றும் காலநிலை மாற்றத் தாக்கங்களுக்கு நேரொத்ததாக ஆக்குவதற்காக விவசாய உயிரியற் பல்வகைமை பாதுகாப்பு மற்றும் பாவணையை பழக்கப்படுத்தச் செய்யும் செயற்திட்டம் 2017 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு முடிவடைய வேண்டியிருந்தது. எனினும் எதிர்பார்த்த நலன்களை மற்றும் விளைவினை பெற்றுக் கொள்வதற்கு முடியாமையினால் செயற் திட்டத்தின் காலவறையினை 2019 நவம்பர் 30 திகதி வரை நீடிக்கப்பட்டி ருந்தது. | குறிப்பிட்ட காலத்தில் செயற்திட்டத்தை பூர்த்தி செய்து எதிர்பார்த்த குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்ள வேண்டியிருந்தது. | எதிர்பார்த்த நலன்களை மற்றும் விளைவுகளை பெற்றுக்கொள்வதற்கு முடியாமையினால் செயற்திட்ட காலம் நீடிக்கப்பட்டுள்ளன. |
| (ஆ) | மனித போஷாக்கு மற்றும் நல்வாழ்வினால் முன்னேற்றுவதற் காக உயிரியற் பல்வகைமையை பாதுகாப்பு மற்றும் நிலைபேறான பாவணை பழக்கப்படுத்தும் செயற்திட்டம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைய வேண்டியிருந்த போதிலும் எதிர்பார்த்த நலன்களை மற்றும் விளைவுகளை பெற்றுக் கொள்வதற்கு முடியாமையினால் செயற்திட்டத்தின் காலவறை யினை 2018 செப்தெம்பர் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (இ) | சுற்றாடல் வழி நிகழ்ச்சித்திட்டம் 2017 ஆண்டின் பின்னர் முன்னெடுத்துச் செல்வதற்கு முடியாமையின் காரணமாக செயற்திட்டத்தின் எதிர்பார்த்த குறிக்கோள்களை நோக்கி நெருங்குவதற்கு முடியாதிருந்தது. | குறிப்பிட்ட கருமத்தை பூர்த்தி செய்வதற்கு தேவையான மாற்று நடவடிக்கைகள் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும். | ஏற்பாடுகள் கிடைக்காத காரணத்தினால் குறிப்பிட்ட நிகழ்ச்சித் திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. |

**3.5 வெளிநாட்டுதவி செயற்திட்டம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கையில் மகாவலி கங்கை வடி நிலத்தை சார்ந்த மெதிரிகிரிய, லங்காபுர மற்றும் வலப்பனை ஆகிய பிரதேசங் களில் உள்ள விவசாய குடியேற்றங்களில் வதியும் விவசாய பிரஜைகளை காலநிலை மாற்றங்களின் பிரதிகூலமான தாக்கங்களுக்கு இசைவாக்குவதற்காக செயற் திட்டத்தின் நிதிச் செயலாற்றல் 52 சதவீதமான குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | செயற்திட்டம் திட்டமிட்டுள்ளவாறு செயலாற்றலை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | செயற்திட்டத்திற்காக ரூபா 250 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்ததுடன் இந்த செயற்திட்டத்தின் உத்தியோக த்தர்கள் விலகிச் செல்லல் மற்றும் புதிதாக ஆட்சேர்ப்பு குறிப்பிட்ட வருடத்தில நடைபெற்றமையால் செயற்திட்டத்தின் அலுவல்கள் மேற்கொள்ளல் தாமத்திற்கு காரணமாகியது. |
| (ஆ) | உமாஓயா பல்கரும அபிவிருத்தி செயற்திட்டத்தில் அனைத்து செயற்பாடுகளையும் நிறைவேற்றுதல் அல்லது பூர்த்தி செய்தல் குறிப்பிட்ட காலச் சட்டகத்தில் மேற்கொள்ளப்படா மையால் எதிர்பார்த்த விளைவுகளை பெற்றுக் கொள்வதற்கு முடியாமல் இருந்தது. | செயற்திட்டத்தின் எதிர்கால நடவடிக்கைகளை விரைவுபடுத்து வதன் மூலம் நலன்பெறுவோரு க்கான நலன்களை வழங்குதல் விரைவுபடுத்தப்பட வேண்டியிருந்தது. | பிரதான சுரங்கத்தில் ஏற்பட்டிருந்த பாரிய நீர் ஒழுகுதலை சரிசெய்வதற்காக காலம் எடுத்த காரணத்தினால் ஆரம்பத்தில் திட்டமிடப்பட்ட காலத்தை விட மிகையான காலம் எடுத்தமையால் நிர்மாண வேலை அலுவல்கள் தாமதம் ஆவதற்கு காரணமாகியிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | சுற்றாடல் முறைமை பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்திட்டத்தினால் வன பாதுகாப்பு திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த வருடாந்த ஏற்பாடுகளில் காட்டுமர தேசிய மரங்கள் வளர்ப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்கு ஒத்த நிகழ்வாக பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வியூக முறை ஒன்றில் தயாரிக்கப்பட்ட மரம் நடுகை நிகழ்ச்சித் திட்டம் உற்பத்தி செய்து ஒலிபெருக்கு வதற்கு ரூபா 5.4 மில்லியன் தொகையொன்று செலவிட்டிருந்த போதிலும் அந்த நிகழ்ச்சித் திட்டங்கள் இது வரை ஒலி பெருக்கப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிட்ட விடயம் உடன்படிக்கையின் பிரகாரம் குறிப்பிட்டுள்ளவாறு உரிய காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு எதிர்பார்த்த குறிக்கோள்களை நோக்கி நெருங்க வேண்டியிருந்தது. | காடுவளர்ப்பு தேசிய மரம் நடுகை நிகழ்ச்சித் திட்டத்தின் ஒலிபெருக்குவதற்காக தகுதியான நிலையிலுள்ள தொலைகாட்சி 08 நிகழ்ச்சி திட்டங்கள் தற்போது தயாரிக்கப் பட்டுள்ளது. அந்த ஒரு நிகழ்ச்சித் திட்டத்திற்கு ரூபா 5.4 மில்லியன் தயாரிப்புச் செலவு மாத்திரம் மேற்கொள்ளப்பட்டி ருந்ததுடன் தேவையான ஏற்பாடுகளை தேடிப்பெற்ற பின்னர் நிகழ்ச்சித் திட்டத்தை விளம்பரப்படுத்துவதற்கு நடவடிக்கை தயாரிக்கப்பட்டுள்ளன. |

**3.6 பெறுகைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தி யோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பெறுகை வழிகாட்டல் கோவையின் பிண்ணினைப்பு 33 இல் இருந்து விலகி அவசர தேவை என கணித்து ரூபா 454,000 தொகை பெறுமதியான 04 கணினிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | பெறுகை வழிகாட்டலின் பிரகாரம் செயற்பட வேண்டியுள்ளது. | எதிர்காலத்தில் உரிய வழிகாட்டலின் பிரகாரம் செயற்படுத்துவதாகவும். |

**3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தி யோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைச்சின் புதிய கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டு சுமார் 1½ வருடங்கள் கடந்திருந்த போதிலும் அவற்றிற்கான கணிய பட்டியலில் ரேட்கள் அங்கீகரிக்கப்பட்டிருக்க வில்லை. அவ்வாறு இருக்கும் போது மதிப்பீட்டு பெறுமதியில் 88 சதவீதம் அதாவது ரூபா 991.22 மில்லியன் தொகை ஒப்பந்தக்காரர்களுக்கு செலுத்தப் பட்டிருந்தது. | ஒப்பந்த வேலை தொடர்பான கணியப்பட்டியல் தொடர்பாக ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டியுள்ளது. | ஏற்பட்டுள்ள தாமதங்களை தவிர்த்தல் அமைச்சிற்கு கட்டுப்படுத்த முடியாத விடயம் ஒன்று என அறிவிக்கப்பட்டது. |
| (ஆ) | அமைச்சின் சுற்றாடல் பிரிவை சேர்ந்த 02 வாகனங்கள் 6 வருடமும் 11 வருட காலமும் விளைவற்றுக் காணப்பட்டதுடன் அவற்றை திருத்தி பயன்படுத்துவதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பயன்படுத்தக் கூடிய சொத்துக்களை திருத்தி பயன்படுத்துவதற்கு அல்லது பொருத்தமான விதத்தில் அப்புறப்படுத்தப் பட வேண்டும். | பதில் வழங்கி இருக்க வில்லை. |
| (இ) | ஜனாதிபதி செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த ஜீப் வண்டி ஒன்று முறைப்படி உரித்தாக்கப் பட்டிருக்கவில்லை. | முறைப்பிரகாரம் உரித்தாக்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். | -மேற்படி- |
| (ஈ) | திருத்தப்பட்டு ஓட்ட நிலைக்கு ஆக்கக் கூடிய 08 வாகனங்களை 02 மாதங்கள் முதல் 06 வருட காலம் ஓட்டத்தில் ஈடுபடுத்தி யிருக்கவில்லை. | திருத்தப்படக் கூடிய வாகனங் களை திருத்தி பயன்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (உ) | மகாவலி அதிகார சபை, நீர்ப் பாசனத் திணைக்களம் மற்றும் ஏனைய 06 நிறுவனங்களில் இருந்து பெற்றிருந்த 14 வாகனங்களை முறைப் பிரகாரம் உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | முறைப்படி உரித்தாக்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது. | -மேற்படி- |

## 3.8 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அரச நிறுவனங்கள் நிர்மாண வேலைகளை பசுமை ஆக்குவதற்காக வழிகாட்டல் கோவையினை அறிமுகப் படுத்துவதற்காக ரூபா 2,967,777 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூபா 1,814,684 தொகை வழிகாட்டல் கோவை வெளியீட்டு விழாவிற்காகவும் ரூபா 1,153,093 தொகை அரச நிறுவனங்களில் விழிப்புணர்வினை ஏற்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்துவதற் காகவும் செலவிடப்பட்டிருந்தது. | செலவுகளை உரிய முறையில் முகாமைத்துவப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது. | பதில் வழங்கியிருக்க வில்லை. |

## 3.9 முகாமைத்துவப் பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இலக்ட்ரோனிக் கழிவுப் பொருள் முகாமைத்துவம் தொடர்பாக முறையான நடைமுறையொன்று கடைபிடிக்கப்பட்டிருக்காததுடன் அவை கொள்கைகளுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டிருந்தது. | தேவையான கொள்கைகளை தயாரித்து சரியாக கழிவுப்பொருள் முகாமைத்தும் செய்யப்பட வேண்டியிருந்தது. | கொள்கை தயாரித்தல் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பாக அரச கணக்குக் குழுவினாலும் விசாரிக்கப் பட்டிருந்தது. அதே போல் கழிவுப் பொருட்கள் முகாமைத்துவம் தொடர்பாக கொள்கை தயாரிக்கப்பட்டு, அமைச்சரவையின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டிருந்ததுடன் அந்த கொள்கையின் ஒரு பகுதியாக இலத்திரனியல் மற்றும் இலக்ட்ரோனிக் கழிவுப் பொருட்கள் அடங்கியுள்ளன என அறிவிக்கின்றேன். |